# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்கள் முன்பாக**

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

************

முறையீட்டு மனு எண்.0006/2016

ஆணை எண்.005/2016

நாள்: 20/ 1 /2016

திரு.மு.பழனி,
சிறுநாவலூர் புதூர்,
துறையூர் வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

– முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியம்,
உப்பிலியாபுரம்,
திருச்சி மாவட்டம்.

– எதிர் மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், சிறுநாவலூர் புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.மு.பழனி அவர்களின் புகார் மனு 04.01.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 006/2016 எண்ணிட்ட மனுவாக பதிவு செய்யப்பட்டது.

**ஆணை:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், சிறுநாவலூர் புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.மு.பழனி என்பவர் உப்புலியாபுரம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மீது சில குற்றச்சாட்டுகளைக் குறிப்பிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முகவரியிடப்பட்ட

கடிதத்தின் நகல் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டது. 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டப்பிரிவு 2(7)–ல் உள்ளாட்சி அமைப்பு என்பதற்கு அளிக்கப்பட்ட பொருள் வரையரையின்படி ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் சம்பந்தப்பட்ட நேர்வுகள் இம்முறைமன்ற நடுவத்தின் வரம்பிற்குட்படாது. மனுதாரரின் புகார் மனுவின் நகல் மாவட்ட ஆட்சியருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. எனவே மேல் நடவடிக்கை தேவையில்லை எனக் கருதி இந்நேர்வினை முடித்து வைக்க இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

ஒம்/–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//

20.1.16

கண்காணிப்பாளர்

பெறுநர்

மாவட்ட ஆட்சியர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
திருச்சிராப்பள்ளி.

நகல்

திரு.மு.பழனி,
சிறுநாவலூர் புதூர்,
துறையூர் வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்